# வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
# காயல்பட்டணம்
## ஆங்கில இலக்கிய மன்றப்போட்டிகள் 28.04.2022 to 04.05.2022

காயல்பட்டணம், வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஆங்கிலத்துறை சார்பாக ஆங்கில இலக்கிய மன்றப்போட்டிகள் 28.04.2022 மற்றும் 04.05.2022 அன்று நடைபெற்றன. ஆங்கிலத்துறை முதலாமாண்டு மாணவி H.H. பாத்திமா ஜொஹரா கிராத் ஓத, தமிழ்த்தாய் வாழ்த்துடன் இலக்கிய மன்றப் போட்டிகள் தொடங்கின. ஆங்கிலத்துறை தலைவர் முனைவர் S. கிருஷ்ணவேணி M.A., M.Phil., SET., Ph.D. தொடக்க உரை வழங்கினார். நிலைக்கண்காட்சி, கவிதைப்போட்டி, ஒரு நிமிட பேச்சுப்போட்டி மற்றும் ஆய்வுக்கட்டுரை வழங்குதல் போன்ற போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன. இளங்கலை மற்றும் முதுகலை ஆங்கிலத்துறை மாணவிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இளங்கலை ஆங்கிலத்துறை மாணவியர்களுக்கான போட்டியில், மூன்றாமாண்டு ஆங்கிலத்துறை மாணவிகள் முதல் இடத்தைப் பெற்றனர். முதுகலை ஆங்கிலத்துறை மாணவியர்களுக்கான ஆய்வு கட்டுரை வழங்குதல் போட்டியில் முதுகலை முதலாமாண்டு மாணவிகள் A. ரம்யா மற்றும் J. ஜெனித்தா முதல் மற்றும் இரண்டாம் இடத்தினைப் பெற்றனர். ஆங்கில இலக்கிய மன்றப் போட்டியின் இறுதி நிகழ்வாக ஆங்கிலத்துறை பேராசிரியை செல்வி க. பால ஈஸ்வரி M.A., M.Phil., அவர்கள் நன்றியுரை வழங்கினார். இளங்கலை இறுதிஆண்டு மாணவி N.A.K. ஜம் ஜம் ஹாஜரா துஆ ஓத, நாட்டுப்பண்ணுடன் இனிதே விழா நிறைவுப்பெற்றது.